# 38

# கடைசி எக்காளம்

## (11:14-19)

*முதல் ஆறு எக்காளங்களும் விரைவான வரிசையில் ஒலித்திருந்தன. நான்காம் எக்காளம் ஊதப்பட்டதற்குப் பின்பு நடந்ததை, யோவான், "ஒரு தூதன் வானத்தின் மத்தியிலே பறந்துவரக் கண்டேன், அவன் மகா சத்தமிட்டு: இனி எக்காளம் ஊதப்போகிற மற்ற தூதருடைய எக்காளசத்தங்களினால் பூமியில் குடியிருக்கிறவர்களுக்கு 'ஐயோ, ஐயோ, ஐயோ, (ஆபத்துவரும்) என்று சொல்லக்கேட்டேன்' " (8:13) என்று எழுதினார். ஐந்தாம் எக்காளம் ஊதப்பட்ட நிகழ்ச்சி, முதல் மூன்று "ஐயோக்களில்" முதலாவதை அறிமுகப்படுத்திற்று; பாதாளக்குழியிலிருந்து வெட்டுக்கிளிகள். பின்பு இரண்டாவது அறிவிப்பு வந்தது: "முதலாம் ஆபத்து கடந்துபோயிற்று, இவைகளுக்குப்பின்பு இன்னும் இரண்டு ஆபத்துகள், இதோ வருகிறது" (9:12). இது ஆறாம் எக்காளத்தினால் பின்தொடரப்பட்டது: நான்கு தூதர்கள் "நரகத்திலிருந்து வந்த குதிரைவீரர்களாக" மாற்றமடைதல்.*

*பயங்கரம் நிறைந்த அந்தச் சேனையானது காட்சியில் இருந்து மறைந்து தேய்கையில், நாம் ஏழாம் எக்காளத்திற்கு - மற்றும் மூன்ரும் ஐயோவுக்கு - தயாராக இருந்தோம். அதற்குப் பதிலாக, நாம் ஐந்து பாடங்களை எடுத்துரைக்க முடிந்த ஒரு இடையிசையைக் கொண்டிருந்தோம். இருப்பினும் இந்த நீளமான இடைவேளையிலும்கூட, நாம் கடைசி எக்காளத்தை மறப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை. பலத்த ஒரு தூதன், "இனி காலம் செல்லாது, ஆனாலும், தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குத் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும் என்று, ... ஆணையிட்டுச் சொன்னான்" (10:6, 7இ).*

*ஏறக்குறைய இரண்டு அதிகாரங்கள் வரையில், ஏழாம் தூதன் கையில் எக்காளத்துடன், அதை ஊதுவதற்குத் தயாராக, அறிவடக்கத்துடன் நின்றிருந்தார். கடைசியில், 11ம் அதிகாரத்தின் முடிவுக்கு அண்மையில், நாம் எதிர்பார்த்திருந்த அறிவிப்பதைக் கேட்கின்றோம்: "இரண்டாம் ஆபத்து கடந்துபோயிற்று, இதோ, மூன்றாம் ஆபத்து சீக்கிரமாய் வருகிறது" (11:14). பின்பு ஒருவழியாகக் கடைசியில், "ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்" (11:15அ).*

*நமது கற்பனைகளில், தடித்த குரல் இசைகள் எதுரொலிக்க நாம், திரை விலக்கப்படும் பயங்கரங்களுக்காக காத்திருக்கின்றோம். இதுவரையிலும் ஒவ்வொரு எக்காள தரிசனமும் அதற்கு முன்னிருந்த எக்காள*

*தரிசனத்தைவிட பயங்கரமாயிருந்தன: இரத்தம் கலந்த கல்மழையும் அக்கினியும் (8:7), தண்ணீர் இரத்தமாக மாறுதல் மற்றும் தண்ணீர் விஷமாகுதல் (8:8-11), அண்டம் இருட்டாகுதல் (8:12), சித்திரவதை செய்யும் வெட்டுக்கிளிகள் (9:1-11), நரகத்திற்குரிய ஒரு சேனை (9:13-19). கடைசி எக்காளமும் மூன்றுவது ஐயோவும் வெளிப்படுத்தவிருந்த பயங்கரமான துன்பம் என்னவாக இருக்குமோ?*[1]

*வேதவசனங்களில் ''கடைசி எக்காளம்'' (1 கொரிந்தியர் 15:52) ஊதப்படுதல் என்பது இரண்டாம் வருகையுடன் இணைவுபடுத்தப் பட்டுள்ளது:*

> *வலுவாய் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார், அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள் (மத்தேயு 24:31; காணவும் 1 தெசலோனிக்கேயர் 4:14-17).*

*அந்த வேளையில், ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும் …" (2 தெசலோனிக்கேயர் 1:7, 8, 10).*

*(நாம் நினைக்கின்ற) எதற்கு வேண்டுமென்றாலும் நாம் ஆயத்தமாக இருக்கின்றோம், ஆனால் இன்னமும், ஏழாம் எக்காளம் ஊதப்படுதலைப் பின்தொடர்ந்து வரும் எக்காள வாசனை அல்லது காட்சி, நம்மைத் திகைப்படையச் செய்யலாம்:*

> *ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான், அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின, அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. அப்பொழுது தேவனுக்கு முன்பாகத் தங்கள் சிங்காசனங்கள்மேல் உட்கார்ந்திருந்த இருபத்துநான்கு மூப்பர்களும் முகங்குப்புற விழுந்து: இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம், தேவரீர் உமது மகா வல்லமையைக் கொண்டு ராஜ்யபாரம்பண்ணுகிறீர் … .*
>
> *என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள். அப்பொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது, … (11:15-19).*

*இந்தக் காட்சியில் "சாபம்" நிறைந்த கூறு ஒன்று பொதிந்துள்ளது: 18ம் வசனம் தேவனுடைய கோபத்தையும் துன்மார்க்கரின் அழிவையும் பற்றிப்*

பேசுகிறது. அத்துடன் கூடுதலாக, ஏழாம் எக்காளம், வெளிப்படுத்தின புத்தகத்தின் கடைசிப் பாதிக்கான அறிமுகமாகப் பணியாற்றுகிறது. இந்தப் பாதியில் ஏழு கோபக்கலசங்கள் (15 மற்றும் 16ம் அதிகாரங்கள்) உள்ளடங்குகின்றன. இருந்தபோதிலும், தேவனின் திட்டங்களும் தேவனுடைய மக்களும் வெற்றியடைதல் என்பதுதான் இவ்வசனப்பகுதியின் வலியுறுத்தமாக உள்ளது. இவ்விதமாக நாம், முதல் ஆறு எக்காளங்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட பிரமாண்டமான காட்சிகளுக்கும் ஒரு நோக்கம் இருந்தது என்று நினைவூட்டப்படுகின்றோம்: அதாவது, தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருப்பவர்களுக்காகத் தேவனுடைய நோக்கம் பணியாற்றுதல்.

ஏழாம் தூதன் (எக்காளத்தை) ஊதும்போது, "தேவரகசியம் நிறைவேறும் என்று" 10ம் அதிகாரத்தின் பலத்த தூதன் முன்பே அறிவித்திருந்தார் (10:6ஆ, 7அ). "தேவரகசியம்" என்ற சொற்றொடர், "இயேசுவுக்குள் இயேசுவைக் கொண்டு, மீட்புக்கான தேவனுடைய திட்டம்" என்பதைக் குறிக்கிறது.[2] மீட்புக்கான தேவனுடைய திட்டம், "மீட்கப்படும் நாள்" வரையிலும் முடிவடையாது (எபேசியர் 4:30) - அப்போது மீட்கப்பட்டவர்கள் யாவரும் அவரது அரியணையைச் சுற்றிலும் கூடியிருப்பார்கள். ஆகையால், வெளிப்படுத்தின விசேஷம் 11:15-19 வசனப்பகுதியானது, மீட்கப்பட்டவர்களுக்குக் காத்திருக்கிற சந்தோஷம் பற்றி இன்னொரு சுருக்கமான, ஆனால் உணர்வெழுச்சியூட்டுகிற, மகிழ்வுக் குறிப்பை நமக்குத் தருகிறது.[3]

இவ்வசனங்கள், தொடக்காலக் கிறிஸ்தவர்களை ஆறுதல் படுத்தும் நோக்கங் கொண்டிருந்தன, மற்றும் இவைகள், உங்களையும் என்னையும் பலப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளன.

## வெற்றியின் அறிவிப்பு (11:15, 17)[4]

இவ்வசனப்பகுதி W. B. வெஸ்ட் என்பவர் "வெளிப்படுத்தின புத்தகம் முழுவதற்குமான திறவுகோல் வசனமாக உள்ளது"[5] என்று கருதிய வசனத்துடன் தொடங்குகிறது: "ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும்,[6] அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய[7] ராஜ்யங்களாயின,[8] அவர்[9] சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின" (வசனம் 15).

இப்போது நாம், 4 மற்றும் 5ம் அதிகாரங்களின் அரியணைக் காட்சிக்குத் திரும்புகின்றோம். "கெம்பீர சத்தங்கள்" என்பவை நான்கு ஜீவன்களில் குரலாக இருந்திருக்க முடியும் (4:6-9) அல்லது பரலோக பாடல்குழுவினர் முழுமையும் இக்குரலை எழுப்பியிருக்க முடியும் (5:11, 12; 7:9, 10). பேசியது யார் என்பதைவிட பேசப்பட்ட வார்த்தைகள் என்ன என்பதே முக்கியமானதாக உள்ளது: இந்தக்குரல்கள், "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின" என்று அறிவித்தன.

நாம் 13ம் அதிகாரத்தைப் படிக்கும்போது, காலங்களினூடே தேவனுடைய ஆளுகையை எதிர்த்து நின்றுள்ள உலகத்தின் சில இராஜ்யங்களைப் பற்றிச் சுருக்கமாக ஆய்வு செய்வோம். இவைகளில் மிகவும் வல்லமை பொருந்திய இராஜ்யங்களில் ஒன்றான ரோமப் பேரரசு, வெளிப்படுத்தின புத்தகம் எழுதப்பட்ட நாட்களில் நிலவியிருந்தது. அந்த இராஜ்யங்களின் கலகம், சங்கீதம் 2:1-5ல்[10] இருந்து கடன்பெறப்பட்ட மொழிநடையில் வெளிப்படுத்தின விசேஷம் 11:18ல் குறிப்பிடப்பட்டுள்ளது: "ஜாதிகள் கோபித்தார்கள் ..." சங்கீதம் 2ன் முதல் வசனத்தைக் கிறிஸ்தவர்கள், இயேசுவைச் சிலுவையில் அறைதலில் ரோமர்களும் யூதர்களும் இணைவுகொண்டிருந்ததற்குக் குறிப்பிட்டனர் (நடபடிகள் 4:25-28), ஆனுல் இவ்வசனத்திற்கான நடைமுறைப் பயன்பாட்டை, தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களைத் தடைசெய்ய முயற்சிக்கும் எந்த ஒரு நாட்டிற்கும் அல்லது குழுவிற்கும் ஏற்படுத்தப்பட முடியும்.

''மனிதகுல வரலாற்றில் மனிதர்களை ஆண்டுள்ள பல்வேறு இராஜ்யங்களின் பின்னணியில் அதிகாரத்துவத்திற்கான ஒரே ஆதாரமூலம் இருக்கிறது":[11] பிசாசனவன் "இந்த உலகத்தின் அதிபதி"யாக[12] இருக்கின்றான் (யோவான் 12:31). வசனம் 15ல் ஒருமைப் பெயர்ச்சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது: "the kingdom [singular] of the world"[13] [ஆனுல் தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் ''உலகத்தின் இராஜ்யங்கள்'' [பன்மை] என்றுள்ளது: மொழிபெயர்ப்பாளர்] கலகம் செய்யும் யாவரையும் எப்போது கீழே தாழ்த்துவார் என்பதை 15ம் வசனம் முன்கூறுகிறது. இருபத்திநான்கு மூப்பர்களும் தங்கள் பல்லவியை எடுத்தபோது அவர்கள், "... கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம், தேவரீர் உமது மகா வல்லமையைக்கொண்டு ராஜ்யபாரம் பண்ணுகிறீர்" (வசனம் 17) என்று பாடினார்கள்.

ஒருவேளை நாம், 15 மற்றும் 17ம் வசனங்கள் போதிக்காத இரு கருத்துக்களை வலியுறுத்த வேண்டி இருக்கலாம்: முதலாவது இவைகள், கிறிஸ்தவ யுகத்தின் முடிவு வரையிலும், தேவன் ஆளுகை செய்திருப்பதில்லை, மற்றும் அவர் ஆளுகை செய்யமாட்டார் என்று போதிப்பதில்லை.[14] தேவன் தமது வார்த்தையினால் உலகத்தைப் படைத்த நாள் தொடங்கி, படைப்பு முழுவதையும் ஆளுகை செய்துகொண்டு இருக்கின்றார் (யாத்திராகமம் 15:18; 1 நாளாகமம் 29:11; சங்கீதம் 10:16; 29:10). நமது பாடங்களில் இதற்குமுன் நாம், 4 மற்றும் 5ம் அதிகாரங்களின் அரியணைக் காட்சிகள், தேவன் இன்னமும் ஆளுகை செய்கின்றார், அவர் இன்னமும் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்று போதிக்கின்றன என்பதை வலியுறுத்தினோம்.

இரண்டாவது, 15 மற்றும் 17ம் வசனங்கள், இந்த நிகழ்கால யுகத்தின் முடிவு வரையில் தேவனுடைய இராஜ்யம் நிலைநாட்டப்படாது என்று போதிப்பதில்லை. வெளிப்படுத்தின புத்தகத்தின் தொடக்க வசனங்களில் யோவான் தம்மை, ''ராஜ்யத்திற்கும் ... உங்கள் உடன்பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான்" என்று குறிப்பிட்டார் (1:9). தேவன் தமது படைப்பை எப்போதுமே ஆண்டிருப்பதால், அவர் எப்போதுமே ஒரு

*இராஜ்யத்தைக் கொண்டிருந்தார்.*[15] மேலும், பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளால் வாக்குரைக்கப்பட்டிருந்த, மேசியாத்துவ விசேஷித்த இராஜ்யம் ஏற்கனவே நிலைநாட்டப்பட்டுள்ளது.

யோவான் ஸ்நானன் மற்றும் இயேசு ஆகியோரின் ஊழியநாட்களில் மேசியாத்துவ இராஜ்யமானது, "சமீபித்திருந்தது" (மத்தேயு 3:2; 4:17). இயேசு, தமது இராஜ்யம் தம்மைப் பின்பற்றியிருந்தவர்களின் வாழ்நாள் காலத்திலேயே "பலத்தோடேவரும்" என்று கூறியிருந்தார் (மாற்கு 9:1). பரத்துக்கேறிய கர்த்தர், தம் அப்போஸ்தர்கள் மீது பெந்தெகொஸ்தே என்ற யூதப்பண்டிகையின் நாளில் ஆவியானவரை அனுப்பியபோது அந்த "பலம்" வந்தது (நடபடிகள் 1:8; 2:1-4). ஆவியானவரின் வருகையானது, இயேசு தேவனுடைய வலது பாரிசத்தில் அமர்ந்து தமது ஆளுகையைத் தொடங்கினார் என்பதற்கு நிருபணமாக இருந்தது.[16] இவ்விதமாக, G. R. பீஸ்லே-முர்ரே, "கிறிஸ்து தமது அரியணைக்கு ஏறியபோது ஆளுகை தொடங்கிற்று"[17] என்று கூற முடிந்தது. இதற்கு ஜார்ஜ் லேடு, "உயர்த்தப்பட்ட இயேசு தமது உயிர்த்தெழுதல் - பரத்துக்கேறுதல் ஆகியவற்றிலிருந்து ஆண்டவரும் மேசியாவுமாக தேவனுடைய வலது கரத்தில் அரியணையில் அமர்த்தப்பட்டு இருக்கின்றார் (நடபடிகள் 2:34-36; எபிரெயர் 1:3; வெளிப்படுத்தின விசேஷம் 3:21)"[18] என்று இசைவு தெரிவித்தார். நடபடிகள் 2 முதல் இரட்சிக்கப்படுகிறவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் தாமாகவே குடிமக்களாகி விடுகின்றனர் (கொலோசெயர் 1:13).

15 மற்றும் 17ம் வசனங்கள், கிறிஸ்தவ யுகத்தின் முடிவில் தேவன் ஆளத்தொடங்குவார் என்றும், மேசியாத்துவ ஆளுகையானது எதிர்காலத்தில் நிலைநாட்டப்படும் என்றும் போதிப்பதில்லை என்றால், அவைகள் வேறு எதைப் *போதிக்கின்றன?* அவைகள், ஒருநாளிலே தேவனுடைய ஆளுகையை எதிர்த்து நிற்கும் யாவையும் கீழே தள்ளப்படும் என்று போதிக்கின்றன. அவைகள், ஒரு நாளிலே எல்லா மக்களும் தேவனுடைய இராஜரீகத்தை ஒப்புக்கொள்வார்கள் என்று போதிக்கின்றன (ரோமர் 14:11ஐக் காணவும்). சுருக்கமாகச் சொன்னால், அவைகள் தேவனுடைய நோக்கத்தின் நிறைவான *வெற்றியைக்* கொண்டாடுகின்றன!

கர்த்தர், தமது மக்கள் போராட யுத்தம் கடினமாயிருக்கும், ஆனால் வெற்றி நிச்சயம் என்று அறிய வேண்டும் என விரும்புகின்றார். சபையானது வெற்றிகரமாக அணிவகுத்துச் சென்று, கடைசியில் தனது தளபதி நித்தியத்தின் மலையின்மீது வெற்றிக்கொடியை நாட்டும் வரையில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக வெற்றியைக் குவிக்கும்.[19] T. F. கிளேஸ்ஸன் பின்வருமாறு எழுதினர்:

> ஆங்கிலத்தில் "It's all over bar the shouting" என்று ஒரு கூற்று உள்ளது; சில போட்டிகளில் சற்றுக்காலத்திற்கு, இன்னமும் முடிந்திராத நிலையுள்ளது என்றிருப்பினும் விளைவுகள் என்பவை முன்னதாகவே முடிவுசெய்யப்பட்ட வகையில் வெற்றி நிச்சயமாக உள்ளது என்று இக்கூற்றின்மூலம் நாம் அர்த்தப்படுத்துகின்றோம். வெற்றிமுழக்கம்

*ஏற்கனவே தொடங்கிய நிலையில், இவ்விடத்திலும் அதுவே விஷயமாக உள்ளது.[20]*

## *துதியின் ஆரவாரம் (11:16-18)*

*வெற்றியின் அறிவிப்புக்குப் பின்பு, நமது கடந்து செல்லுதலானது துதியின் ஆரவாரத்துடன் தொடருகிறது. இருபத்திநான்கு மூப்பர்களும்[21] முன்பு செய்திருந்து போலவே, அரியணைக்கு முன்பாகப் பணிந்து வீழ்ந்து தேவனைத் துதித்தனர் (வசனம் 16). 4ம் அதிகாரத்தில், படைப்பவர் என்ற வகையில் அவரை, அவர்கள் துதித்திருந்தனர் (வசனங்கள் 10, 11); 5ம் அதிகாரத்தில், மீட்பர் என்ற வகையில் அவரை, அவர்கள் ஆராதித்தனர் (வசனங்கள் 8-10); இப்போது வெற்றியாளர் மற்றும் இராஜா என்ற வகையில் அவரை, அவர்கள் அறிவித்தனர்:*

> *... "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம், தேவரீர் உமது மகா வல்லமையைக்கொண்டு ராஜ்ய பாரம்பண்ணுகிறீர். ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது, மரித்தோர் நியாயத் தீர்ப்படைகிறதற்கும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான்களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கும், பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும், காலம் வந்தது என்று சொல்லி, தேவனைத் தொழுதுகொண்டார்கள்" (வசனங்கள் 17, 18).*

*அவர்கள் பாடிய துதியின் பாடல், "வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் எஞ்சிய பகுதிகள் 'பொருளடக்க அட்டவணையாக' பயன்பட முடியும்."[22]*

### ***கர்த்தர் மகா வல்லமையுடன் ஆட்சி செய்வார் (வசனம் 17)***

*முதலாவதாக அவர்கள், தேவனுடைய ஆளுகையின் மகா வல்லமையைப் பற்றிப் பேசினர்: "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே, உம்மை ஸ்தோத்திரிக்கிறோம், தேவரீர் உமது மகா வல்லமையைக்கொண்டு ராஜ்யபாரம்பண்ணுகிறீர்" (வசனம் 17). தேவனுடைய ஆளுகை பற்றி 19ம் அதிகாரத்தில் கலந்துரையாடப்படும் (வசனங்கள் 6, 15, 16ஐக் காணவும்).*

*"இருக்கிறவரும் இருந்தவரும்" என்ற சொற்றொடருக்கு விசேஷித்த கவனத்தைத் செலுத்துங்கள். இந்த வார்த்தை அமைப்பில் வித்தியாசம் எதையாவது நீங்கள் காணுகின்றீர்களா? 1ம் அதிகாரத்தில் தேவன், "இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவராலும்" என்று பண்பு படுத்தப்பட்டார் (வசனம் 4; வசனம் 8ஐக் காணவும்). அதிகாரம் 4ல், நான்கு ஜீவன்களும் தேவனைத் துதித்தன; அவைகள் அவரை, "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய*

*கர்த்தர்" என்று கூறின (வசனம் 8). இருப்பினும் 11:17ல், "வருகிறவருமாகிய" என்ற சொற்றொடர் [ஆங்கில வேதாகமத்தில்] விடப்பட்டுள்ளது[23] [ஆனால் தமிழ் வேதாகமத்தில் இவ்விடத்தில் இந்தச் சொற்றொடர் உள்ளது] - ஏனென்றால் தரிசனத்தில் நாம், கர்த்தர் துன்மார்க்கரைத் தண்டிக்கவும் உண்மையுள்ளவர்களுக்குப் பலன் அளிக்கவும், ஏற்கனவே வந்திருக்கும் ஒரு காலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தோம்.*

***கர்த்தர் நீதியாக நியாயந்தீர்ப்பார் (வசனங்கள் 18அ, இ)***

*படைப்பு யாவற்றின்மீதும் தேவன் தமது அதிகாரத்தை நிலை நாட்டுவதற்கு நியாயத்தீர்ப்பின் நாள் என்பது அத்தியாவசியமான அம்சமாக உள்ளது. சிலர் தேவனை, நியாயத்தின் தேவன் என்று நினைக்க விரும்புவதில்லை, ஆனால் மெரில் டென்னீ பின்வருமாறு சுட்டிக் காண்பித்தார்:*

> *அன்பின் தேவன் நியாயத்தீர்ப்பின் தேவனாகவும் இருக்க வேண்டும், ஏனெனில் அவரால் தமது மக்களை எவ்வளவாக அன்புகூர்ந்து முடிவில்லாத வகையில் அவர்கள் துன்புறுவதை அனுமதிக்க முடியும்? அல்லது கைவிடப்பட்ட தோட்டத்தில் உள்ள களைகளைப் போல், தீமை தடைப்படாது பெருகுவதை அவரால் எப்படி அனுமதிக்க முடியும்? மனிதர்களின் செயல்கள் நியாயந்தீர்க்கப்பட வேண்டும், ஏனெனில் நியாயத்தீர்ப்பின் நாள் இல்லாவிட்டால், நீதிமான்கள் ஒருக்காலும் அங்கீகரிக்கப்படமாட்டா, மற்றும் தீமையானது தண்டிக்கப்படாமல் சென்றுவிடும் ... .*
>
> *... சமானமற்ற தன்மைகள் சுத்தப்படுத்தப்பட வேண்டும் மற்றும் தவறுகள் நேராக்கப்பட வேண்டும் என்று நீதி நேர்மையானது வற்புறுத்துகின்றது.[24]*

*அடுத்ததாக இருபத்திநான்கு மூப்பர்களும், தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பற்றிப் பேசினர்: "ஜாதிகள் கோபித்தார்கள், அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது, மரித்தோர் நியாயத்தீர்ப்படைகிறதற்கு ... காலம்[25] வந்தது (வசனங்கள் 18அ). மக்களினங்களின் எதிர்ப்புணர்வை நாம், அதிகாரங்கள் 13, 17 மற்றும் 19 ஆகியவற்றில் காண்போம். 14:10; 16:19 மற்றும் 19:15 போன்ற வசனப்பகுதிகளில் தேவனுடைய கோபம் முக்கியத்துவப்படுத்தப்படும். நியாயத்தீர்ப்பிற்கான "காலம்" என்பது 20ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் நாடகத்துவமாக்கப்படும்.*

*மக்களினங்கள் "கோபித்தல்" என்பது பற்றி, வார்ரென் வயர்ஸ்ப் ஒரு தகுந்த கேள்வியைக் கேட்டார்: "மக்களினங்கள் கோபிப்பதற்குக் கொண்டிருந்தது என்ன?" அவர் பின்வருமாறு எழுதினார்:*

> *அவர்களுக்குக் கர்த்தர் நிச்சயமாகவே நல்லவராகவும் கிருபையுள்ளவராகவும் இருந்தார். அவர்களின் தேவைகளை அவர் நிறைவேற்றினார் (நடபடிகள் 14:15-17; 17:24-31), அவர்களின் எல்லைப் பகுதிகளை நியமித்தார் மற்றும் மனிதர்கள்*

> *இரட்சிக்கப்படுவதற்கு வாய்ப்பளிக்கும்படி தமது நியாயத்தீர்ப்பைத் தள்ளிப்போட்டார். இன்னும் அதிகமாக அவர், தமது குமாரனை உலகத்தின் இரட்சகராயிருக்கும்படி அனுப்பினார் ... . அவர்களுக்கு அவர் இதைவிட அதிகமாக என்ன செய்திருக்க முடியும்?*[26]

*சங்கீதம் 2 இதே கேள்வியைக் கேட்டது:*

> *ஜாதிகள் கொந்தளித்து, ஜனங்கள் விருதாக்காரியத்தைச் சிந்திப்பானேன்? கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி: அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள் (சங்கீதம் 2:1-3).*

*''மக்களினங்கள் ஏன் கோபமுறுகின்றனர்?'' என்ற கேள்விக்கு, ''ஏனென்றால் அவர்கள் தங்கள் சொந்த வழிகளைக் கொண்டிருக்க விரும்புகின்றனர் ... வயதுவந்த பிள்ளைகளைப்போல், மக்களினங்கள் எல்லாக்கட்டுப்பாடுகளையும் தூக்கியெறிய விரும்புகின்றனர்; ...''*[27] *என்பது பதிலாக உள்ளது.*

*ஒருநாளில் தேவன், மக்களினங்களின் சிறுபிள்ளைத்தனமான கோபத்தைத் தமது நீதியான கோபத்தைக் கொண்டு சந்திப்பார். 18ம் வசனத்தில் ''கோபித்தார்கள்'' மற்றும் ''கோபம்'' என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தைகள் ஒரே வேர் வார்த்தையில் இருந்து வருகின்றன. தேவன் தமது நியாயத்தீர்ப்பில் மேலெழுந்தவாரியாக இருப்பதில்லை; தண்டனையானது குற்றத்திற்குத் தகுந்ததாக இருக்கும் (கலாத்தியர் 6:7ஐக் காணவும்). இதே கருத்து 18ம் வசனத்தின் பிற்பகுதியிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளது, அப்பகுதி, அவர், ''பூமியைக் கெடுத்தவர்களை கெடுப்பார்'' என்று அறிவிக்கிறது (வசனம் 18இ). கோபமுற்றவர்கள் தேவனுடைய கோபத்தை அறிவார்கள். கெடுத்தவர்கள் கெடுக்கப்படுவார்கள்.*

*நம்மில், உயிர்ச்சூழல் பற்றிய விழிப்புணர்வுள்ள சமூகத்தில் வாழ்பவர்கள், ''பூமியைக் கெடுத்தவர்கள்'' என்ற வார்த்தைகளை வாசிக்கும்போது, இயற்கை ஆதாரமூலங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் பற்றி நினைக்கலாம். இதற்கு நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தவும் முடியும், ஆனால், "பூதங்கள் எரிந்து உருகிப்போம்" (2 பேதுரு 3:12) என்ற நிலையைக் கொண்ட, பூமி என்று அழைக்கப்படும் மண் மற்றும் பாறைகளால் ஆன மாபெரும் பந்தைத் தவறாகப் பயன்படுத்துதல் என்பதைக் காட்டிலும் அதிகம் அழிவுக்கேதுவான விஷயங்களைப் பரிசுத்த ஆவியானவர் தமது சிந்தையில் கொண்டிருந்தார்.*[28] *"கெடுத்து" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கவார்த்தை, இல்லாதாக்குதல் அல்லது இல்லாதாக்குதலைக் கொண்டுவருதல் என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் இது, அந்துப் பூச்சிகள் உடைகளை மோசமாக்குவதுபோல் (லூக்கா 12:33), மோசமான சிந்தையில் துன்மார்க்கமான நிலைப்பாடுபோல் (1 தீமோத்தேயு*

*6:5), "மோசமானதாக மாற்றுதல் அல்லது மோசம்போக்குதல்" என்று அர்த்தப்படுத்துகிறது* (Thayer).[29] *ஆவியானவர் இந்த பூமியை மோசம் போக்கினவர்களை - இதை ஒழுக்கம்சார்ந்த வகையில், அழுக்கு, தேவதூஷணத் தவறு, மற்றும் தேவபக்தியற்ற அவிசுவாசமான வாழ்வு ஆகியவற்றினால் நிரப்பினவர்களை - பற்றிப் பேசினார்.*

*யோவானின் நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள், பூமியைக் கெடுத்துப்போட்டவர்கள் என்ற தங்கள் பட்டியலில் ரோமப்பேரரசை முதலிடத்தில் வைத்திருக்கலாம், ஆனால் இவ்வசனப்பகுதியானது இன்றைய நாட்களில் "கெட்டசிந்தையுள்ளவர்களுக்கு" (1 தீமோத்தேயு 6:5), நீங்களும் நானும் வாழும் இவ்வுலகத்தை மோசம் போக்கு கின்றவர்களுக்கு நடைமுறைப்படுகிறது.*

***கர்த்தர் கிருபையாய்ப் பலன் அளிப்பார் (வசனம் 18ஆ)***

*நியாயத்தீர்ப்பின் நாள் என்பது, தேவனை எதிர்த்தவர்களிடத்தில் "கணக்குத் தீர்க்கும்" நாளாக மாத்திரம் இராது. அது தேவன் தமக்குத் சொந்தமானவர்களை அங்கீகரித்து அவர்களுக்குப் பலன் அளிக்கும் உணர்வெழுச்சி மிகுந்த வேளையாகவும் இருக்கும். அதை "தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காரருக்கும் பரிசுத்தவான் களுக்கும் உமது நாமத்தின்மேல் பயபக்தியாயிருந்த சிறியோர் பெரியோருக்கும் பலனளிக்கிறதற்கான ... காலம்"*[30] *என்று இருபத்திநான்கு மூப்பர்களும் விவரித்தனர் (வசனம் 18ஆ).*

*பலனளிக்கப்படுபவர்களைப் பற்றிப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்களுக்கு இடையில் வித்தியாசமொன்றை ஏற்படுத்த முடியும். எடுத்துக்காட்டாக, எல்லாக்கிறிஸ்தவர்களுமே பரிசுத்தவான்களாக (தேவனுடைய ஊழியத்திற்கென்று "பிரித்துவைக்கப்பட்டவர்களாக") இருக்கையில், எல்லாக் கிறிஸ்தவர்களுமே தீர்க்கதரிசிகளாக (தேவனுக் காகப் பேசுபவர்களாக/தேவனுடைய பேச்சாளர்களாக) இருப்பதில்லை. இருப்பினும், "ஊழியக்காரர்கள்," "தீர்க்கதரிசிகள்," "பரிசுத்தவான்கள்," "உமது நாமத்திற்கு அஞ்சுகின்றவர்கள்" மற்றும் "பெரியோர், சிறியோர்" என்ற சொற்றொடர்கள், ஐந்து அல்லது ஆறு குழுவினரைக் குறிக்கும் நோக்கங்கொண்டு இருக்கவில்லை. மாறாக இது, உண்மையுள்ளவர்கள் யாவரும் - அவர்கள் யார், அவர்கள் சமர்ப்பித்த ஊழியம், உலகத்தால் அவர்கள் "முக்கியமானவர்கள்" என்று கருதப்பட்டனரா இல்லையா என்பவற்றைப் பொருட்படுத்தாமல் - பலன் அளிக்கப்படுவார்கள் என்பதை எடுத்துரைக்கும் கவனச்சிறப்பான வழிவகையாக இருந்தது.*

*நீங்கள் செய்கின்ற யாவற்றையும் கர்த்தர் அறிகின்றார் மற்றும் பாராட்டுகின்றார், மேலும் அவர் [எதிர்காலத்தில்] ஒரு நாளிலே உங்களுக்குப் பலன் அளிப்பார் என்பதை அறிந்து உணர்வது ஆறுதல் அளிப்பதாக இருப்பதில்லையா?*

> *"சந்தோஷப்பட்டு, களிகூருங்கள், பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும், ..." (மத்தேயு 5:12).*

*... அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப்பெறுவான் (1 கொரிந்தியர் 3:8).*

*... சுதந்திரமாகிய பலனைக் கர்த்தரால் பெறுவீர்களென்று அறிந்து ... (கொலோசெயர் 3:24).*

*... அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவர் ... (எபிரெயர் 11:6).*

*... பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள் (2 யோவான் 8).*

*நமக்குக் கிடைக்கும் பலன் பற்றிய குறிப்புகள் நமக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தின் கடைசி அதிகாரத்தில் தரப்படும், ஆனால் நமது சிந்தைகள், உண்மையுள்ளவர்களுக்குத் தேவன் இருப்பில் வைத்துள்ள அற்புதங்கள் யாவற்றையும் உய்த்துணரக் கூடாதவையாக உள்ளன. "எழுதியிருக்கிறபடி: 'தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை' " (1 கொரிந்தியர் 2:9). நாம் கொண்டுள்ள சில தடயக்குறிப்புகள் நம்மை பய உணர்வு மற்றும் எதிர்பார்ப்பினால் நிரப்புகின்றன.*

*உண்மையுள்ளவர்களுக்குத் தேவன் அளிக்கும் பலன் பற்றிய வாக்குத்தத்தம், கடினமான வேளைகளின்போது, தொடக்கக்காலக் கிறிஸ்தவர்களை நிலைநிறுத்திற்று. அதுபோலவே நாம் கடினமான சூழ்நிலைகளினூடே செல்லும்போது இது [வாக்குத்தத்தம்] நம்மை நிலைநிறுத்த முடியும்.*

## தேவனுடைய உண்மைத்தன்மையின் ஒரு உறுதிப்பாடு *(11:19)*

*நமது வசனப்பகுதியின் ஆறுதல் இத்துடன் முடிவதில்லை. 19ம் வசனத்தில் நாம், துதியின் வார்த்தைகளுக்குத் தேவனுடைய பதிலைக் கொண்டுள்ளோம். திடீரென்று பாடலானது அமைதியில் மூழ்கிற்று; பின்பு யோவானின் பார்வையில், தெய்வீக மகிமையின் ஒரு புதிய தரிசனம் வெடித்தது:[31]*

*அப்பொழுது பரலோகத்தில்[32] தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது, அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின (வசனம் 19). ("உடன்படிக்கை பெட்டி" என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இந்தத் தரிசனம் நிச்சயமாகவே, யூதத்துவக் கருத்துக்களில் நன்கு*

பழக்கமானவர்களுக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் கொண்டு வந்தது. பழைய ஏற்பாட்டு உருவகத்தில் பழக்கமற்றவர்களுக்கு, விளக்கத்தின் சில வார்த்தைகள் அவசியமாக உள்ளன:

யாத்திராகமம் 25:10-22, உடன்படிக்கைப் பெட்டியைப் பற்றி நமக்குக் கூறுகிறது. அது பொன்னால் மூடப்பட்டிருந்த ஒரு மரப்பெட்டியாயிருந்தது, அது சுமார் நான்கு அடிகள் நீளமும், $2^1/_2$ அடிகள் உயரமும் அதே அளவு அகலமும் உடையதாயிருந்தது.[33] பெட்டியின் மூடி "கிருபாசனம்" என்று அழைக்கப்பட்டது, அதில் இரண்டு கேருபீன்கள்[34] இருந்தன. அவை யிரண்டும் கிருபாசனத்தைக் கீழ்நோக்கி, உட்புறம் பார்த்தவைகளாக இருந்தன. இந்தப் பெட்டியைக் குறித்து தேவன் மோசேயிடத்தில், "அங்கே நான் உன்னைச் சந்திப்பேன். கிருபாசனத்தின்மீதிலும் சாட்சிப் பெட்டியின்மேல் நிற்கும் இரண்டு கேருபீன்களின் நடுவிலும் இருந்து நான் ... உன்னோடே சொல்லுவேன்" என்று வாக்குத்தத்தம் செய்திருந்தார் (யாத்திராகமம் 25:22). யூதத்துவச் சிந்தையில், பெட்டியானது தேவனுடைய மகிமைக்கும் பிரசன்னத்திற்கும் ஒத்ததாக இருந்தது.

பெட்டிக்குள், பத்துக்கற்பனைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகள் இருந்தன (உபாகமம் 10:3-5).[35] இந்தக் கற்பனைகள், இஸ்ரவேல் மக்களுடன் தேவன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் இருதயம் போன்ற மையப்பகுதியாய் இருந்தன (உபாகமம் 5:2-22ஐக் காணவும்), எனவே இதற்கு "உடன்படிக்கையின் பெட்டி" என்று பெயர் வழங்கிற்று.[36] ''உடன்படிக்கை'' என்பது யூதர்களுக்கு மதிப்புமிக்க வார்த்தையாக இருந்தது.[37]

> ''உடன்படிக்கை'' என்பது, பழைய ஏற்பாட்டின் வேறு எந்த வார்த்தையையும் விட அதிகமாக, இஸ்ரவேல் மக்களுக்கு, தேவனு டைய நிரந்தரமான மற்றும் நம்பத்தகுந்த வாக்குத்தத்தத்தை நினைவூட்டுகிறது. எரேமியா, மேசியாத்துவ மீட்பின் நம்பிக்கையைப் பற்றி உடன்படிக்கையின் மொழிநடையில் பேசுகின்றார், ... "நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி" (எரேமியா 32:40). பாதுகாக்கப்பட்ட இவ்வார்த்தைகள் இப்போது மறுபடியும் நினைப்பூட்டப்பட்டு மீண்டும் உரைக்கப்படுகின்றன.[38]

பெட்டியானது முதலில் ஆசரிப்புக்கூடாரத்திலும் (யாத்திராகமம் 26:33, 34), பின்பு தேவாலயத்திலும் (1 இராஜாக்கள் 8:6) மகாப்பரிசுத்த ஸ்தலத்தில்[39] வைக்கப்பட்டிருந்தது.[40] இது ஆண்டிற்கு ஒருமுறை (பாவ நிவாரண நாளன்று) மாத்திரம் (பிரதான ஆசாரியர் என்ற) ஒரே மனிதர், மகாப்பரிசுத்த ஸ்தலத்தினுள் மூடுதிரை வழியை கடந்து சென்று தமக்கும் மக்களுக்கும் நிவாரணம் செலுத்தியபோது அவரால் மாத்திரம் காணப்பட்டது (லேவியராகமம் 16:11-17; எபிரெயர் 9:7ஐக் காணவும்). தேவனுடைய பிரசன்னத்திற்கு வந்து, மதிப்புமிக்க பெட்டியைக் காண அனுமதிக்கப்படுதல் என்பதைவிட பெரிய கனம் எதுவும் யூதத்துவத்தில் இருந்ததில்லை.

இந்தப் பின்னணியைச் சிந்தையில் கொண்டு,[41] இக்காட்சி விரிகையில்

*தொடக்ககால வாசகர்கள் கொண்டிருந்திருக்கக் கூடிய மன எழுச்சியைக் கற்பனை செய்து பாருங்கள்: "அபொழுது பரலோகத்தில் தேவனுடைய ஆலயம் திறக்கப்பட்டது, அவருடைய ஆலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டது" (வசனம் 19அ). மகாப்பரிசுத்த ஸ்தலம் திறக்கப்பட்டதென்பது தேவனுடைய சொந்தப் பிரசன்னத்தின் வாக்குத்தத்தத்தைப் பற்றியதாயிருந்தது (21:3),[42] அதேவேளையில் பெட்டி என்பது, தேவன் உடன்படிக்கையின் தேவன், அவர் தமது வாக்குத்தத் தங்களைக் காப்பவராயிருக்கின்றார் என்பதற்கு நினைவூட்டுதலாயிருந்தது.*

*பொன்மயமான வீதிகளோ, தெள்ளத்தெளிவான ஆறுகளோ அல்லது வினோதமான மரங்களோ அல்ல, ஆனால் நமது உண்மையுள்ள கர்த்தரின் நெருக்கமான பிரசன்னமே பரலோகத்தின் மாபெரும் ஈர்ப்பாக இருக்கிறது. அங்கு கடைசியில், ''மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார், அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" (21:3)!*

*இவ்வசனப்பகுதியானது தேவனுடைய அதிகாரம் மற்றும் வல்லமை ஆகியவற்றை பரலோகத்திற்கு உரிய வானவேடிக்கைச் சுவையான காட்சியின் வெளிப்பாட்டுடன் முடிகிறது: "அப்பொழுது மின்னல்களும், சத்தங்களும், இடிமுழக்கங்களும், பூமியதிர்ச்சியும், பெருங்கல்மழையும் உண்டாயின" (வசனம் 19ஆ).[43]*

## *முடிவுரை*

*அதுவே "கடைசி எக்காளத்தின்" தரிசனமாக உள்ளது. ஒரு கருத்தில் நாம், கடைசி எக்காளத்தின் தரிசனத்திற்கான முடிவைக் கண்டிருக் கவில்லை; ஏனென்றால், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி, ஏழாம் எக்காளம் வெளிப்படுத்தின புத்தகத்தின் பின்பாதிக்கு, அதிலும் விசேஷமாக, ஏழு கோபக்கலசங்களுக்கு அறிமுகமாகப் பணியாற்றுகிறது. இருந்தபோதிலும், "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழி வில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1 கொரிந்தியர் 15:52) என்ற கணத்தைப் பற்றி ஆச்சரியம் நிறைந் தவர்களாகப் போதுமான அளவு நாம் கண்டிருக்கின்றோம். கிளென் பேஸ்[44] என்பவருடைய தந்தையாரின் கல்லறையைக் குறிக்கும் கல்லறைக் கல்லின்மீது, "மகிமையுள்ள உயிர்த்தெழுதலின் நம்பிக்கைகளில்" என்ற வார்த்தைகள் உள்ளன.*

*வின்ஸ்ட்டன் சர்ச்சில் என்பவரின் சவ அடக்கத்தின் முடிவின்போது, ஆங்கில அரசியல்வாதியின் மரண வேளையில் வழக்கமாகச் செய்வதுபோல், இராணுவ இசைக்குழு முழங்கிற்று. பின்பு, சர்ச்சில் வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தபடியால், பணிக்கு அழைக்கும் இசை - எழுந்து தயாராவதற்கான சைகை ஒலிக்கப்பட்டது. அது சர்ச்சில் உயிர்த்தெழுதலில் கொண்டிருந்த நம்பிக்கையின் உறுதிப்பாடாக இருந்தது. கடைசி எக்காளத்தின் ஒலியானது நீங்கள் முன்னெதிர் நோக்குகின்றதாக*

*உள்ளதா அல்லது நீங்கள் அஞ்சுகின்றதாக உள்ளதா?*

*ஏழாம் எக்காளத்தின் தரிசனம், துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களை ஊக்கமூட்டுவதற்காகத் தரப்பட்டது. ''அவர்களின் விரோதிகள் அவர்களைக் கொலைசெய்யலாம், ஆனால் அவர்களை* [கிறிஸ்தவர்களை]*த் தோல்வியடையச் செய்ய இயலாது என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார்.'' ''மிகவும் மோசமான காரியங்கள் எப்போதுமே கடைசியான காரியங்களாய் இருப்பதில்லை'' என்பதைத் தம்முடைய மக்கள் அறிந்திருக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.*[45] *அவர்கள் உண்மையுடன் நிலைத்திருந்தால், கடைசியில் வெற்றியிருக்கும் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார்!*

*ஏழாம் எக்காளம் ஊதப்படும்போது, அது உங்களுக்கு வெற்றியின் நாளாக இருக்குமா அல்லது தோல்வியின் நாளாய் இருக்குமா? கர்த்தருடைய வருகைக்கு நீங்கள் ஆயத்தப்படாதிருந்தால், இன்றே ஆயத்தப்படத் தயாராகுங்கள்!*[46]

---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*மெரில் C. டென்னீ என்பவர், Proclaiming the New Testament: The Book of Revelation என்ற புத்தகத்தில், ''என்றென்றைக்கும் அழியாத இராஜ்யம்'' என்ற ஆய்வுக்கருத்தை மையமாக வைத்து, 11ம் அதிகாரம் மீது ஒரு பாடத்தை வெளியிட்டார். அவர் இவ்வசனப்பகுதியில் இருந்து மூன்று முக்கிய கருத்துக்களைத் தரவழைத்தார்: (1) இராஜ்யத்தின் வல்லமை, (2) இராஜ்யத்தின் திட்டம், மற்றும் (3) இராஜ்யத்தின் நிலைப்புத்தன்மை.*

---

குறிப்புகள்

[1]*ஒவ்வொரு புதிய ''ஐயோ''வும் அதற்கு முந்தியதைக் காட்டிலும் மோசமானதாக இருக்கும் என்பதே ''ஐயோ'' அறிவிப்புகளின் மறைகருத்தாக உள்ளது. ஒரு கருத்தில், மூன்றாவது ''ஐயோ''வானது, ''அதிலிருந்து மேல்முறையீடு எதுவும் இராததால்'' மிகவும் துன்பகரமானதாக உள்ளது* (Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation,* The Bible Speaks Today Series [Downers Grove, Ill.: Intervarsity Press, 1975], 107). [2]*இந்தப் புத்தகத்தில் உள்ள, ''பெரிய செய்தியைக் கொண்ட சிறிய புத்தகம்'' என்ற பாடத்தில் காணவும்.* [3]*11:15-19 வசனப்பகுதியானது ரோமப் பேரரசின் மீது தேவனுடைய வெற்றியின் சித்தரிப்பாக மாத்திரம் இருக்கச் சாத்தியக்கூறு உள்ளது, ஆனால் எல்லாவற்றையும் கூறிமுடித்தல் என்பதற்கே இவ்விடத்தின் மொழிநடை நன்கு பொருந்துகிறது. உதாரணமாக, தேவன் இருக்கிறவர், இருந்தவர் ஆனால் இனிவரவிருப்பவர் என்று இல்லை* [ஆங்கில வேதாகமத்தில் குறிப்பிடப்படுவது] *(வசனம் 17) என்பது உறுதியாகவே இந்த எடுத்துரைப்பில் நாம் உலகத்தின் முடிவை அடைந்துள்ளோம் என்ற மனப்பதிவிற்கு நம்மை விட்டுச் செல்லுகிறது (இந்தப்பாடத்தில் வசனம் 17க்கான குறிப்புகளைக் காணவும்). அறிமுகப்பாடப் பகுதியில் நாம் குறிப்பிட்டபடி,*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் நாம், மீண்டும் மீண்டும் முடிவுக்குக் கொண்டுவரப்படுகின்றோம் - மற்றும் சற்றே மாறுபட்ட கண்ணோட்டத்துடன் நாம் திரும்பவும் தொடங்குகின்றோம். "கடைசி விஷயங்கள்" பற்றிய இந்தக் கண்ணோட்டமானது, 12ம் அதிகாரத்தில் இயேசுவின் பிறப்பு பற்றிய விபரங்களினால் பின்தொடரப்படும்.* [4]*இந்தப்பாடத்தின் பிரதானத் தலைப்புகளும் துணைத்தலைப்புக்களும்* Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary,* vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 600-1 *என்ற புத்தகத்தில் இருந்து தழுவியமைக்கப்பட்டுள்ளன.* [5]W. B. West Jr., *Revelation Through First -Century Glasses,* ed. by Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 85, இதேபோன்ற ஒரு *விளக்கம், ஜார்ஜ் எல்டன் லேடு என்பவரால், A Commentary on the Revelation of John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1972), 161 *என்ற புத்தகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.* [6]*"கர்த்தர்" (எஜமானர், ஆட்சியாளர்) என்ற சொற்றொடர், பிதாவையோ அல்லது குமாரனையோ குறிக்கக் கூடும். இவ்வசனத்தில் இது பிதாவைக் குறிக்கிறது.* [7]*"அவருடைய கிறிஸ்து" (நேரடி அர்த்தத்தில் "அவருடைய அபிஷேகம் பெற்றவர்") என்பது பழைய ஏற்பாட்டில் மேசியாத்துவ மொழிநடையாகும் (சங்கீதம் 2:2ஐக் காணவும்) இது இயேசுவில் நிறைவேற்றம் பெற்றது.* [8]*"நமது கர்த்தருடைய இராஜ்யம்" என்ற சொற்றொடரில் "இராஜ்யம்" என்ற வார்த்தை மூலவசனத்தில் காணப்படுவதில்லை, ஆனால் இலக்கணக்கட்டமைப்பில் இது மறைவாய் உணர்த்தப்படுகிறது.* [9]*"அவர்" என்பது பிதாவைக் குறிக்கிறதா அல்லது குமாரனைக் குறிக்கிறதா? சிலர், 1 கொரிந்தியர் 15:24-28ன் அடிப்படையின், "அவர்" என்பது பிதாவை அர்த்தப்படுத்துகிறது என்று தைரியமாக உறுதிப்படுத்துகின்றனர் - மற்றும் இவர்களின் கூற்று சரியானதாக இருக்கலாம். இதற்கு மறுபுறத்தில், நமது வசனப்பகுதியானது இப்போதுதான், இராஜ்யமானது "நமது கர்த்தருக்கும்" "அவருடைய கிறிஸ்துவுக்கும்" உரியதாகும் என்று வலியுறுத்திற்று, இது ஒன்றிணைந்து ஆளுதல் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. இராபர்ட் மவுன்ஸ் என்பவர், "ஒருமைச் சொல்லானது ... இந்த ஒன்றிணைந்த இராஜரீகத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறது" என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார்* (Robert Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977], 231). G. R. *பீஸ்லீ-முர்ரே என்பவர், இது பிதாவையா அல்லது குமாரனையா, யாரைக் குறிக்கிறது என்ற கேள்வி, யோவானைப் பொறுத்தமட்டில் அவசியமற்றதாக அர்த்தப்பட்டிருக்க வேண்டும், "ஏனெனில் அவரைப் பொறுத்தமட்டில் கர்த்தரும் கிறிஸ்துவும் பிரிக்கப்பட முடியாத ஒருமைப்பாட்டில் இருந்தனர்" என்று கூறினார்* (G. R. Beasley-Murray, *The Book of Revelation,* The New Century Bible Commentary Series [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974], 189. [10]*2ம் சங்கீதம் "இராஜரீக சங்கீதம்" என்று வகைப்படுத்தப்பட்டு, புதிய அரசருக்கு முடிசூட்டுதல் போன்ற, இஸ்ரவேல் மக்களின் இராஜரீக நிகழ்ச்சிகளின்போது பயன்படுத்தப்பட்டது. இந்த சங்கீதத்தில் உள்ள மக்களினங்களின் கொந்தளிப்பு (கலகம்) என்பது, ஒரு புதிய அரசர் முடிசூட்டப்படும்போது, அங்கு ஏற்படும் குழப்பத்தை, அருகாமையில் உள்ள நாடுகள் அனுகூலப்படுத்திக் கொண்டு இஸ்ரவேல் நாட்டை வெற்றிகொள்ள முயற்சிக்கும் செயலுக்கான உடனடிக் குறிப்பாயிருந்தது. இந்த அர்த்தத்துடன் கூடுதலாக, 2ம் சங்கீதமானது மேசியாத்துவ மறைக்கருத்துக்களைக் கொண்டிருந்தது மற்றும் இது இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவரை முடிசூட்டுதலுக்கான குறிப்பாகவும் இருந்தது என்று இஸ்ரவேல் மக்கள் புரிந்து கொண்டனர். 2ம் சங்கீதம் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி மேற்கோள்*

*காண்பிக்கப்படுகிறது.*

[11]Ladd, 161. [12]*அவசியம் ஏற்பட்டால் நீங்கள் இங்கு நிறுத்தி, பிசாசுக்குத் தேவன் செய்யும்படி அனுமதித்துள்ளது மாத்திரமே அவன் கொண்டுள்ள ஒரே அதிகாரமாக உள்ளது என்பதை - மற்றும் தேவன் இந்த உலகத்தில் தமது சொந்த நோக்கங்களைச் செயல்படுத்தும் அதிகாரத்திற்குத் சாத்தானையும் அவனது முகவர்களையும் அனு மதித்துள்ளார் என்பதையும் - வலியுறுத்தக்கூடும். இருப்பினும் கனமான இந்தப் பாடக்கருத்தைப் பற்றிய புரிந்து கொள்ளுதல். வெளிப்படுத்தின விசேஷம் 11:15-19ன் செய்தியைப் புரிந்து கொள்வதற்கு அவசியமற்றதாக உள்ளது.* [13]KJV *வேதாகமத்தில்* "kingdoms" *என்ற பன்மைச் சொல் உள்ளது (தமிழ் வேதாகமத்திலும் இது "இராஜ்யங்கள்" என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது), ஆனால் கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரங்கள் "இராஜ்யம்" என்ற ஒருமைச் சொல்லுக்கே ஆதரவாக உள்ளன.* [14]*உண்மையில், 17ம் வசனத்தில் கடந்தகால வினைச்சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனப்பகுதியானது நேரடி அர்த்தத்தில்,* "and *did* reign" *என்று உள்ளது.* (KJV *வேதாகமத்தைக் காணவும். எனது* NASB *வேதாகமப்பிரதியில் உள்ள பக்க ஓரக்குறிப்பானது* "[Literally], *didst reign*" *என்று கூறுகிறது.)* [15]*"இராஜ்யம்" என்ற வார்த்தை அடிப்படையில் "ஆளுதல், ஆளுகை செய்தல், இராஜரீகம்" என்று அர்த்தப்படுகிறது.* [16]*ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பலர். இங்கே "சில கருத்தமைவுகளில்" இன்று ஆட்சி செய்கின்றார் என்று ஒப்புக்கொள்கின்றனர், ஆனால் அவர்கள் இன்னமும், கிறிஸ்து பூமிக்கு மறுபடியும் திரும்பி வந்து, எருசலேம் நகரத்தில் நேரடி அர்த்தத்தில் ஒரு ஆயிரம் ஆண்டுகள் ஆட்சிசெய்தலைத் தொடங்குவது வரைக்கும் மேசியாத்துவ இராஜ்யம் நிலைநாட்டப்படாது என்று வலியுறுத்துகின்றனர். இயேசு தமது இராஜ்யத்தில் இப்போது அரசாளுகின்றார் என்று வேதாகமம் போதிக்கிறது.* [17]Beasley-Murray, 189. [18]Ladd, 162. [19]This sentence was adapted from West, 85-86. [20]T. F. Glasson, *The Revelation of John,* The Cambridge Bible Commentary on the New English Bible Series (Cambridge, England: Cambridge University Press, 1965), 71.

[21]*இருபத்திநான்கு மூப்பர்களைப் பற்றிய விளக்கங்களுக்கு, வெளிப்படுத்தின விசேஷம் 2 என்ற புத்தகத்தில் உள்ள "கருத்துநோக்கில் விஷயங்களை வைத்தல்" என்ற பாடத்தில் காணவும்.* [22]Wiersbe, 600. [23]KJV *வேதாகமத்தில்* "and art to come" [*தமிழில் "வருகிறவரும்"*] *என்றுள்ளது, ஆனால் இச்சொற்றொடர் உள்ளடக்கப் பட்டது கையெழுத்து பிரதிகளின் ஆதாரத்தினால் தாங்கிநிற்கப்படுவதில்லை.* [24]Merrill C. Tenney, *Proclaiming the New Testament*: *The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 58. [25]*"காலம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை kairos என்பதாக உள்ளது, இது பொருத்தமான காலம் என்பதை அடிக்கடி/பெரும்பாலும் சுட்டிக்காண்பிக்கிறது.* [26]Wiersbe, 600. [27]Ibid. [28]*இயற்கையைப் பாதுகாக்கும் முயற்சிகளைச் சிறுமைப்படுத்த நான் விரும்புவதில்லை, ஆனால் விஷயங்களைக் கருத்து நோக்கில் இடுவதற்கு நான் விரும்புகின்றேன். பலர் நமது புதிய (ஆவிக்குரிய) உடல்களுக்கான புதிய (ஆவிக்குரிய) வசிப்பிடமான "புதியபூமி" (வெளிப்படுத்தின விசேஷம் 21:1) என்பதின்மீது தாங்கள் கொண்டுள்ளதைக் காட்டிலும் அதிகமான அக்கறையை இந்த அழியும் பூமியின்மீது கொண்டுள்ளனர்.* [29]Homer Hailey, *Revelation*: *An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 263. Hailey was quoting the definition given in C. G. Wilke and Wilibald Grimm, "*diaphtheiro,*" *A Greek - English Lexicon of the New Testament*, trans, and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint Grand Rapids, Mich.: Regency Reference Library, n.d.), 143. [30]*வெளிப்படுத்தின விசேஷத்தில், "சிறியோரும் பெரியோரும் …" என்ற சொற்றொடரின் மற்ற பயன்பாடுகளுக்கு 13:16; 19:5; 20:12 ஆகிய வசனங்களைக்*

காணவும்.

[31]This sentence was adapted from Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 71. இந்த வேளையில் யோவான், ஆலயத்தின் உட்புறம் சுருக்கமாகக் கண்ணோக்கமிடவே அனுமதிக்கப்பட்டிருப்பார். அது 15:5ல் மறுபடியும் திறக்கப்படும். [32]முன்பு நாம், யோவான் அளவிட வேண்டியிருந்த ஆலயத்திற்கும் (11:1, 2) பரலோகத்தின் ஆலயத்திற்கும் இடையிலான வித்தியாசங்களைக் கண்டோம். (இந்தப் புத்தகத்தில் உள்ள "நாம் அளவுக்கேற்றபடி இருக்கின்றோமா?" என்ற பாடத்தில் காணவும்.) பரலோகத்திலுள்ள ஆலயம் பற்றி வெளிப்படுத்தின புத்தகத்தில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது (3:12; 7:15; 14:15, 17; 15:5, 6). [33]பெட்டியானது $2^{1}/_{2}$ முழம் நீளமும் $1^{1}/_{2}$ முழம் அகலமும் உயரமும் கொண்டிருந்தது. ஒரு முழம் என்பது ஏறக்குறைய 18 அங்குலங்களைக் கொண்ட அளவையாகும். [34]கேருபீன்கள் பற்றிய ஒரு சுருக்கமான கலந்துரையாடலுக்கு, வெளிப்படுத்தின விசேஷம் 2 என்ற புத்தகத்தில் உள்ள "கருத்து நோக்கில் விஷயங்களை வைத்தல்" என்ற பாடத்தில் நான்கு ஜீவிகள் பற்றிய குறிப்புகளைக் காணவும். [35]கற்பலகைகளுடன் கூடுதலாக, மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் ஒன்றும் ஆரோனின் துளிர்த்த கோலும் கூட பெட்டிக்குள் அல்லது அதற்கு அருகில் வைக்கப்பட்டிருந்தன (யாத்திராகமம் 16:32-34; எண்ணாகமம் 17:10; எபிரெயர் 9:4). காலத்தின் ஏதோ ஒரு வேளையில் இவைகள் நீக்கப்பட்டன அல்லது தொலைந்து போயின என்பது தெளிவு (1 இராஜாக்கள் 8:9). [36]"உடன்படிக்கையின் பெட்டி" என்ற சொற்றொடர், எண்ணாகமம் 10:33; 14:44; உபாகமம் 10:8; 31:9, 25, 26 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. பத்துக்கட்டளைகள் அடங்கிய கற்பலகைகள் "சாட்சியம்" என்று அழைக்கப்பட்டதால் (யாத்திராகமம் 31:18), பெட்டியானது (யாத்திராகமம் 25:22; 26:33, 34; லேவியராகமம் 16:13 ஆகிய வசனங்களில் உள்ளதுபோல்) மிகவும் பொதுவாக, "சாட்சியத்தின் பெட்டி" என்று அழைக்கப்பட்டது. [37]"உடன்படிக்கை" என்ற வார்த்தை இருதரப்பினருக்கு இடையில் உள்ள ஒரு ஒப்பந்தத்தைக் குறிக்கிறது. பழைய உடன்படிக்கையானது இஸ்ரவேல் மக்களுடன் தேவன் கொண்டிருந்த ஒப்பந்தமாயிருந்தது. புதிய உடன்படிக்கை என்பது தேவனுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையில் உள்ள ஒப்பந்தமாக உள்ளது. இந்த ஒப்பந்தத்தில் தேவன் தமது பங்கை எப்போதுமே காத்துள்ளார், அவர் அதை இனியும் எப்போதுமே காத்துக் கொண்டிருப்பார். [38]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 197. [39]உடன்படிக்கையின் பெட்டி, அதன் வரலாற்றின் தொடக்ககாலத்தில், தேவன் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார் என்ற உண்மையை வலியுறுத்துவதற்காக, அவ்வப்போது, அவர்களுக்கு முன் தூக்கிச் செல்லப்பட்டது. (எடுத்துக்காட்டாக, யோசுவா 4:9, 10; 6:1-20 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்.) பிற்பாடு, அது மகாப்பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டது. [40]இந்தப் புத்தகத்தின் வேறொரு பகுதியில் உள்ள தேவாலயத்தின் வரைபடத்தைக் காணவும்.

[41]இஸ்ரவேல் மக்களின் அரசாட்சியின் நாட்களில், பெட்டி தொலைந்து போயிருந்தது என்ற இன்னொரு பின்னணி விஷயமானது தொடக்ககால சிந்தைகளில் இருந்திருக்கலாம். யூதப்பாரம்பரியத்தின்படி, தேவாலயத்துடன் சேர்த்து அழிக்கப்படாதபடிக்குப் பெட்டியானது மறைத்து வைக்கப்பட்டிருந்தது. கி.மு. 586ல் பாபிலோனியர்கள் தேவாலயத்தையும் நகரத்தையும் ஒருசேர அழித்தபோது (2 இராஜாக்கள் 25:9) பெட்டியையும் அழித்திருக்கச் சாத்தியக்கூறு உள்ளது. எகிப்து நாட்டின் அரசன் தேவாலயத்தின் மற்ற பொக்கிஷங்களை எடுத்துச் சென்றபோது (1 இராஜாக்கள் 14:25, 26), பெட்டியையும் எடுத்துச் சென்றிருக்கலாம்


என்று சிலர் நினைக்கின்றனர். (பொருட்களால் செய்யப்பட்ட இந்தப் பெட்டிக்கு என்னவாயிற்று என்பது முக்கியத்துவமற்றதாக உள்ளது. இதனுடைய ஆவிக்குரிய பிரதிமைதான் பரலோகத்தில் இருந்தது என்று வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரம் நமக்குக் கூறுகிறது, இதுவே முக்கியமானதாக உள்ளது.) [42]இயேசு சிலுவையில் மரித்தபோது, தேவாலயத்தின் திரைச்சீலை கிழிந்துபோனது (மத்தேயு 27:51), இது தேவனிடத்தில் சென்று சேரும் வழி திறக்கப்பட்டது என்பதை அடையாளப்படுத்திற்று (எபிரெயர் 10:19-22). இயேசுவினால் தொடங்கப்பட்ட இது, கடைசியில் நாம் பரலோகம் சென்று சேரும்போது நிறைவடையும். [43]இவை யாவையும், வெளிப்படுத்தின புத்தகத்தில் நாம் ஏற்கனவே பலமுறைகள் கண்டுள்ள தேவனுடைய வல்லமை மற்றும் நியாயம் ஆகியவற்றின் அடையாளங்களாக உள்ளன. இவ்வசனப்பகுதியானது, தேவனுடைய உடன்படிக்கை அன்பு பற்றிய அடையாளங்களை அவரது நீதியுள்ள கோபம் பற்றிய அடையாளங்களுடன் ஒன்றிணைக்கிறது. [44]கிளென் பேஸ் என்பவர், அர்க்கான்சாஸின் ஜட்ஸோனியாவில் உள்ள கிறிஸ்துவின் சபையில் ஒரு பிரசங்கியாராக இருக்கின்றார். [45]சர்ச்சில் பற்றிய விவரிப்பும் மேற்கோள்களும் ஜான் ரிஸ் அவர்களால், டெக்ஸாஸில் உள்ள அபிலேன் என்ற இடத்தில் உள்ள தென்மலைகள் கிறிஸ்துவின் சபையில், 1991ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் தேதியன்று பிரசங்கிக்கப்பட்ட "தீர்க்கதரிசிகள் மற்றும் வேதசாட்சிகளாக மரித்தவர்களின் சபை" என்ற தலைப்புடைய ஒரே பிரசங்கத்தில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளன. [46]நீங்கள் இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாகுதல் எவ்வாறு என்று கூறுவதற்கு, ஒருவர் கிறிஸ்தவராவது எப்படி என்று நினைவூட்ட விரும்பலாம் (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; கலாத்தியர் 3:26, 27) மற்றும் தேவனுடைய பிள்ளையாய் இருந்து தவறு செய்கின்றவர் எப்படி மீளக்கட்டு விக்கப்படலாம் என்றும் நீங்கள் கூறவிரும்பலாம் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16; 1 யோவான் 1:9).

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. "எக்காளங்கள் எச்சரிப்பதற்காக உள்ளன" என்று நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம், ஆனால் எக்காளங்கள் அறிவிப் பதற்கு பயன்படுத்தப்பட்டன என்றும் நாம் கண்டுள்ளோம். ஏழாவது எக்காளம் எச்சரிப்பின் கூறு ஒன்றைக் கொண் டிருக்கையில், தேவனை எதிர்த்து நிற்பவர்கள் மனந்திரும்பா திருந்தால் என்ன நடக்கும் என்று கூறவும், இது தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பவர்களின் முடிவுநிலை பற்றியும் அறிவிக்கிறது. இந்த அறிவிப்பை நீங்கள் எவ்வாறு தொகுத் துரைப்பீர்கள்?
2. இந்தப்பாடத்தின்படி, 11:15ம் 11:17ம் போதிப்பது என்ன? இவைகள் எதைப் போதிப்பதில்லை?
3. வசனம் 17ன் விவரிப்பில் (ஆங்கில வேதாகமத்தில்) "வருகிறவரும்" என்ற பழக்கமான விஷயம் விடப்பட்டுள்ளது என்ற உண்மைக்குத் தனிச்சிறப்பு எதுவும் இருப்பதாக நீங்கள் நினைக்கின்றீர்களா?

*(தமிழ் வேதாகமத்தின்படி இந்தக் கேள்விக்கு இடமில்லை.)*

4. *தேவன் நியாயத்தின் தேவனாக இருக்கின்றார் என்பதோடு அவர் இரக்கத்தின் தேவனாகவும் இருக்கின்றார் என்பதை வலியுறுத்துதல் முக்கியமானதாக இருப்பது ஏன்?*
5. *11:14-19ல் தேவனுடைய நியாயத்தீர்ப்புகளைப் பற்றி, "தண்டனை என்பது குற்றத்திற்கு பொருத்தமாவது" எவ்வாறு?*
6. *''பூமியைக்கெடுத்தவர்கள்'' என்ற சொற்றொடரை நீங்கள் வாசிக்கும்போது, நீங்கள் யாரைப் பற்றி நினைக்கின்றீகள்?*
7. *நமது முயற்சிகளுக்குத் தேவன் பலனளிக்கின்றார் என்பதை வாசித்தல் ஆறுதலாக உள்ளதா? (பலன்களை அளித்தல் என்ற கருத்தை, நாம் நமது இரட்சிப்பை ஈட்டுவதில்லை என்ற வேதாகமத்தின் போதனையுடன் எவ்வாறு ஒப்புரவாக்க முடியும்?)*
8. *"உடன்படிக்கை" என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது? இவ்வார்த்தை யூதர்களுக்கு அர்த்தத்தைக் கொண்டு வந்தது ஏன்? இது எவ்வாறு நமக்கு ஆறுதலைக்கொண்டு வரமுடியும்?*
9. *உடன்படிக்கையின் (பொருட்களால் ஆன) பெட்டியைப் பற்றி - மற்றும் அதற்குப் பரலோகத்தில் உள்ள ஆவிக்குரிய மாற்றுப்பிரதியின் தனிச்சிறப்பு பற்றிக் கூறவும்.*
10. *''கடைசி எக்காளம்'' ஒலிக்கப்படுவதற்கு ஒருவர் தயாராய் இருக்கவில்லை என்றால், அவர் அல்லது அவள் என்ன செய்ய வேண்டும்?*



**உடன்படிக்கை பெட்டி (11:19)**